
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

FRIDAY, JUNE 16, 2023

வெள்ளிக்கிழமை 16 ஜூன், 2023 | ஒளி: 09 கதிர்: 020 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE



# ஒக்.15 புலமைப்பரிசில் பரீட்சை

தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி நடைபெறும். விண்ணப்பங்கள் வியாழக்கிழமை (15) முதல் ஜூலை மாதம் ஆறாம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது

## அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு

# சதி

நாட்டில் தற்போது சற்று ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதால் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் உட்பட சில குழுக்கள் அதிகாரத்தை கைப்பற்ற முயல்வதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்தன குற்றம்சாட்டியுள்ளார். நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தவேளை, ஜனாதிபதி பதவியை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். அந்தவேளையில், ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கும் ஜே.வி.பி தலைவருக்கும் பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்தார்.



தொடர்ச்சி P2

# உ/த பரீட்சைக்கு சட்டரீதியான மாதம்

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பரீட்சைகளை நடத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்த சட்டரீதியாக குறித்த ஒரு மாதத்தை அறிவிக்கவுள்ளதாகவும், அதனை மாற்றுவதானால் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கிகாரம் பெறவேண்டும் எனவும், மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர அதை மாற்றமுடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாணவர்களை 13 வருடங்கள் பாடசாலைக் கல்வியில் தக்கவைக்க வேண்டியதன் அவசியத்தை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்த



ஜனாதிபதி, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் அவசியம் தொடர்பில் துரிதமாக தீர்மானம் எட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# வெண்மையாக்கும் கிறீம்கள் வேண்டாம்

இணையத்தளங்களின் ஊடாக பரவலாக விற்பனை செய்யப்படும் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தோல் மருத்துவர் இந்திரா கஹவிட்ட, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், சருமத்தை வெண்மையாக்கும்



நூற்றுக்கணக்கான பொருட்கள் பல்வேறு இணையத்தளங்களில் கிடைக்கின்றன.


தொடர்ச்சி P2

## காய்ச்சல் நோயாளிகளை

# நுளம்புகளிடமிருந்து பாதுகாப்பது முக்கியம்

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு நுளம்புகள் மூலம் டெங்கு பரவுவதால், அனைத்து காய்ச்சல் நோயாளிகளையும் நுளம்புகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற விடயத்தை மக்களிடம் விரைவில் கொண்டு செல்ல வேண்டும் என டெங்கு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவி இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

எனவே, டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் போன்று, டெங்கு நோய் பாதிப்பு உறுதிப்படுத்தப்படும் வரை காய்ச்சல் ஏற்பட்டுள்ள அனைத்து நோயாளிகளையும் பாதுகாப்பதில் அதிக கவனம்



செலுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும், அது தொடர்பில் மக்களைத் தெளிவூட்ட ஊடகங்களின் ஆதரவு தேவை எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# கிளியில் 40 சதவீத காணிகள் படையினர் வசமே இருக்கின்றன

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி நகரத்தில் உள்ள நாற்பது சதவீதமான காணிகள் படையினர் வசம் தொடர்ந்தும் இருக்கின்ற போது, நகரத்தின் அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து



கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க இராணுவத்தின் ஒத்துழைப்பு அவசியம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானது என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரம் எடுத்துரைத்துள்ளார்.

குழு மோதல்கள்,


தொடர்ச்சி P2



# மீண்டும் தாயான 'ஷீனா'

ரிதியகம சபாரி சரணாலயத்திலுள்ள பெண் சிங்கமான 'ஷீனா' மீண்டும் இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது. அவை இரண்டும் பெண் குட்டிகள் எனவும் அவற்றின் உடல்நிலை சீராக உள்ளதாகவும் சரணாலய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். விலங்குப் பரிமாற்ற திட்டத்தின் மூலம் ஜேர்மனி நாட்டிலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட 'ஷீனா' சிங்கம், இதற்கு முன்னதாகவும் இரண்டு முறை குட்டிகளை ஈன்றுள்ளது.

# இரும்புப் படலை சிறுவனின் உயிரைப் பறித்தது




■ செ.கீதாஞ்சன்

வீட்டின் இரும்புப் படலை, சிறுவன் மீது விழுந்ததில் அச்சிறுவன் உயிரிழந்த சம்பவம் முல்லைத்தீவு, கேப்பாபிலவு பகுதியில் புதன்கிழமை (14) காலை இடம்பெற்றுள்ளது.

கேப்பாபிலவு பகுதியைச் சேர்ந்த மூன்று அகவை நிரம்பி ஆதவன் லிதுசிகன் என்ற சிறுவன் வீட்டு படலையில் விளையாடிக் கொண்டிருந்த வேளை, கேற் (இரும்பு படலை) சிறுவன் மீது விழுந்து சிறுவன் உயிரிழந்துள்ளான்.

தொடர்ச்சி P2

# லொறியும் மோட்டார் சைக்கிளும் எரிந்து நாசம்





■ செ.கீதாஞ்சன், ரொசேரியன் லெம்பர்ட்

முல்லைத்தீவிலும், மன்னாரிலும் இரண்டு வாகனங்கள் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளன. மன்னாரில் லொறியும், முல்லைத்தீவில் மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு எரிந்துள்ளன. மன்னார், முருங்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இசைமாலைத்தாழ்வு பகுதியில் புதன்கிழமை (14) வாகனம் ஒன்று முழுமையாக பற்றியெறிந்த நிலையில், சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் உயிர் தப்பியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# பங்குகள் விற்பனை விவகாரத்தில் பங்காளிகளுக்கு இடையில் முரண்பாடு

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் பல விடயங்கள் தொடர்பில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. இதனோர் அங்கமாகவே, பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதி கலந்தாலோசித்து வருகின்றார் என்றும் தகவல் கசிந்துள்ளது.

இந்நிலையில், டெலிகொம் நிறுவனத்தில் உள்ள அரசாங்கத்தின் பங்குகளை விற்பனை செய்யும் யோசனையை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது எனவும் இலாபமீட்டும் அரச நிறுவனங்கள் விற்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன கூறியுள்ளார்.

இந்நிலையில், இலாபமீட்டும் அரச நிறுவனங்கள் விற்கப்படுவதை அனுமதிக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார். டெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்வது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகளவில் அங்கம்வகிக்கும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான துறைசார் மேற்பார்வைக் குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# 259 சதவீதத்தால் கைதிகள் அதிகரிப்பு

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அரச கணக்குகள் பற்றிய குழுவில் (COPA) தெரியவந்துள்ளது.

கைதிகளின் எண்ணிக்கை 259 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கூறினார்.

சில சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 300 முதல் 400 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் லசந்த



அழகியவண்ண தலைமையில் அரச கணக்குகள் பற்றிய குழு கூடிய போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2


PAGE 1 தொடர்ச்சிகள்

# சதி

ஆனால், அவர்கள் அனைவரும் அதனை ஏற்க மறுத்தனர். ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் அதனை ஏற்றுக்கொண்டு, நாட்டில் ஸ்திரதன்மையை ஏற்படுத்தியுள்ளார்.

எனினும், எதிர்க்கட்சி உட்பட சில குழுக்கள், தற்போது சதி மூலம் அதிகாரத்தை கைப்பற்ற முயல்கின்றன எனவும் ருவான் தெரிவித்துள்ளார்.

# நுளம்புகளிடமிருந்து பாதுகாப்பது முக்கியம்



டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட மேல்மாகாண உபகுழு மேல்மாகாண தலைமைச் செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் கூடியபோதே இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் டெங்கு ஒழிப்புக்கான அமைச்சர்கள் குழு மற்றும் நிபுணர் குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டதுடன், அந்த நிபுணர் குழு மாகாண மட்டத்தில் 09 உபகுழுக்களையும் நியமித்துள்ளது.

மருத்துவமனைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் டெங்குவைக் கட்டுப்படுத்த தனிவழிகாட்டுதல்களைத் தயாரிக்குமாறு, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டதோடு, மருத்துவமனைகளில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட இடத்தில் (Fever Corners) அவர்களைத் தனிமைப்படுத்தவும், டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு உள்ளவர்கள் மூலம் வேறு ஒருவருக்கு நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் குறுஞ்செய்திகள் மூலம் தெரிவிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறிவுறுத்தப்பட்டது.

டெங்கு நுளம்புகள் அதிகம் பெருகும் பகுதிகளான பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவன வளாகங்கள், வியாபார பகுதிகள், கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பகுதிகள் ஆகியவற்றை சோதனையிடுவதற்காக வாரத்தில் ஒரு நாளை ஒதுக்கிக்கொள்ளுமாறும், அப்பகுதிகளை சோதனையிடும் பணிகளுக்கு பொலிஸார் மற்றும் முப்படையினரின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் சீதா அரம்பேபொல உரியதரப்புகளுக்கு அறிவுறுத்தினார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த உகந்த ஆடைகளை அணிந்து வருவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டதோடு அதைக் பெற்றோர்களுக்கு மேலதிக செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# லொறியும் மோட்டார் சைக்கிளும் எரிந்து நாசம்

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, இசைமாலைத்தாழ்வு பகுதியில், வியாபார பொருட்களுடன் மன்னார் நோக்கிப் பயணித்த சிறிய பட்டா ரக வாகனத்தின் இஞ்சின் திடீரென தீப்பற்றியது.

வாகன சாரதியும் உதவியாளரும் துரித கதியில் வாகனத்தில் இருந்து வெளியேறி, வாகனத்தில் இருந்த பொருட்களையும் இறக்கி பாதுகாத்துள்ளனர்.

வெளியேறிய சற்று நேரத்தில், வாகனம் முழுவதும் தீபரவல் ஏற்பட்டு, வாகனம் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது. சாரதியும் உதவியாளரும் எந்தவித காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த போது, வெடிப்பு சத்தம் கேட்டதையடுத்து அந்த மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டுள்ளது. ஒட்டுசுட்டான், கற்சிலைமடு பகுதியில் உள்ள 'நவீனம்' கள்ளுத் தவறணைக்கு அருகில் உள்ள கொங்கிறீட் வீதியில், புதன்கிழமை (14) மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண்களுக்கான மோட்டார் சைக்கிளில் தாயார் தனது மகனை ஏற்றி வரும்போது, மோட்டார்சைக்கிளில் திடீரென வெடிப்பு சத்தம் கேட்டுள்ளது. அதையடுத்து அந்த மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிள் முற்றுமுழுதாக எரிந்து சாம்பலாகியுள்ளது. இதில் பயணித்த தாயும் மகனும் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

# 259 சதவீதத்தால்...

சிறைச்சாலைகள் திணைக்களத்தை ஸ்தாபிப்பது தொடர்பிலான தற்போதுள்ள சட்டமூலத்துக்குப் பதிலாக சர்வதேச தரத்துக்கு அமைவாக புதிய சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு கோப் குழு பரிந்துரைத்த போதிலும், அந்தப் பணிகளில் தாமதம் ஏற்படுவது குறித்து அக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.



# உ/த பரீட்சைக்கு சட்டரீதியான மாதம்



தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்புக்கான அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் முதலாவது கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பில் தீர்மானம் ஒன்றைக் கோரினார்.

அத்துடன், தொழில்நுட்பத்துடன் கல்வி இணைந்து முன்னோக்கிச் செல்லவேண்டியதன் அவசியத்தையும், பாடசாலை முறையின் தரத்தைப் பேணவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திய ஜனாதிபதி, பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் தரமான கல்வி வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், அதற்காக ஆய்வு அலுவலகங்கள் செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

தொழிற்பயிற்சி துறையில் உடனடி மாற்றங்கள் தேவை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார். பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்ட நாடு நிச்சயமாக அபிவிருத்தியை நோக்கி நகரும். எனவே எதிர்கால தொழிற்சந்தைக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்ட பணியாளர்களை உருவாக்குவதற்கு இலங்கையின் தொழிற்பயிற்சித்துறை துரிதமான மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

2048ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடு என்ற இலக்கை அடைவதற்கு முறையான கல்வி முறைமை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் நாட்டுக்குத் தேவை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

# கிளியில் 40...

கிளிநொச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானக் காணிக்குரிய பாதை இதுவரை படை யினரால் விடுவிக்கப்படாத நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி நகரத்தில் முக்கிய இடத்தில் இருக்கின்ற காணிகள், வர்த்தக நிலையங்கள் இன்றும் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. இதனால், நகரத்தின் அபிவிருத்தியை அல்லது மாவட்டத்தின் அபிவிருத்தியைத் தீர்மானிக்க முடியாத ஒரு சூழல் காணப்படுகின்றது. கிளிநொச்சி நகரத்துக்கான நூலகத்தை இதுவரை கட்ட முடியாத நிலையில், தற்போது நூலகத்துக்குச் சொந்தமான காணியில் இரண்டு பரப்பு காணியை மாத்திரமே படையினர் விடுவித்திருக்கின்றார்கள். ஏனைய நான்கு பரப்பு காணி இதுவரை விடுவிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதைவிட மக்கள் போக்குவரத்துக்கு இலகுவாக காணப்பட்ட குமாரசூரியர் வீதி, யோகர் சுவாமி வீதி என்பன நீண்ட காலமாக பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த வீதிகள் என்பதுடன் இந்த வீதிகள், நகர உருவாக்கத்துக்கு முன்னரான பழைய வீதிகளாகவே காணப்படுகின்றன. ஆனால், இந்த வீதிகள் இரண்டையும் இராணுவத்தினர் முழுமையாக மூடி இராணுவ முகாம் அமைத்துள்ளனர்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்கு சொந்தமான விளையாட்டு மைதானத்துக்கு மாணவர்கள் சென்று வருவதற்கு குமாரசூரியர் வீதியை பயன்படுத்த வேண்டிய தேவை காணப்படுகிறது. பாடசாலைக்கு முன்பாக உள்ள குமாரசூரியர் வீதியை முழுமையாக படையினர் மூடி இருப்பதால், மாணவர்கள் ஏ-09 வீதி வழியாக விளையாட்டு மைதானத்துக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில், குறித்த வீதியை விடுவிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும், அந்த வீதி விடுவிப்பதற்கு படையினர் தயாராக இல்லை.

இதேபோல, கிளிநொச்சி டிப்போ சந்திக்கு முன்பாக நினைவுச் சின்னமாக படையினர் பயன்படுத்துகின்ற சந்திரன் பூங்கா காணி, மற்றும் அதற்குப் பின்னால் உள்ள காணி என்பன, இன்றுவரை படையினரால் விடுவிக்கப்படாத நிலையில், தொடர்ந்தும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டே இருக்கின்றன.

இராணுவ பிரசன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பும் கிளிநொச்சி நகர அபிவிருத்திக்கு இடையூறாகவே காணப்படுகின்றன. எனவே இவ்வாறான நிலங்களை விடுவிப்பதன் மூலமே, மாவட்டத்தின் அபிவிருத்தியை தீர்மானிக்க முடியும். இவ்வாறு, கிளிநொச்சி நகரத்தை அண்மித்த பகுதிகளில் 40 சதவீதமான நிலங்களை படையினர் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டுக்குள் ஆக்கிரமித்து வைத்திருப்பது, மாவட்டத்தின் அபிவிருத்தியில் அல்லது நகரத்தின் அபிவிருத்தியில் எந்த முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை என்றார்.

# வெண்மையாக்கும் கிரீம்கள் வேண்டாம்



அவ்வாறான பொருட்கள் மற்றும் தயாரிப்புகள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா போன்ற விடயங்களை ஆராயுமாறு வலியுறுத்தியுள்ளார்.

தோல் மருத்துவர் என்ற ரீதியில் ஒரே இரவில் சருமத்தை அழகாக மாற்றும் எந்தவொரு பொருளையும் தாம் பரிந்துரைக்கவில்லை. எனினும், எவராவது, தனது தோலில் ஏதேனும் மாற்றங்களைச் செய்ய விரும்பினால், அது படிப்படியாகவும் முறையாகவும் செய்யப்பட வேண்டும் என தோல் மருத்துவர் இந்திரா கஹவிட்ட மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க இராணுவத்தின் ஒத்துழைப்பு அவசியம்

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல், கால்நடைகள் வெட்டுதல், மணல் கடத்தல் போன்றவற்றை தடுப்பதற்கு இந்த ஒத்துழைப்பு மிக அவசியமாகும் என புதிதாக பதவியேற்றுள்ள யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதியிடம் எடுத்துரைத்துள்ளதாக சிவபாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியாக புதிதாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராச்சி, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு தரப்பின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம். மேலும், காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிய நிலையில், சீமெந்து கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பொருட்கள் களவாடப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, இராணுவத்தினர் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல அளவீடு செய்யப்படாது, பொதுமக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளன. குறித்த காணிகளையும் விரைவில் அளவீடு செய்யும் நடவடிக்கையில் உரிய சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், இராணுவத்தினர் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன் என்றார்.

மேலும், மீள்குடியேறிய மக்களுக்கு இராணுவத்தினரால் 700ற்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரின் பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல் எதிர்வரும் காலத்திலும் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டுத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் தான் கோரியதாகவும் தெரிவித்தார்.

# இருப்புப் படலை சிறுவனின் உயிரைப் பறித்தது

உயிரிழந்த சிறுவனின் உடலம், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவனின் உயிரிழப்பு கேப்பாபிலவு கிராமத்தில் பெரும்சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது வடக்கு மாவட்டங்களில் அதிகளவில் சிறுவர்கள் உயிரிழப்பு சம்பவம் பதிவாகிவருகின்றமை அதிக கவனத்துக்குரியது.

# பங்குகள் விற்பனை விவகாரத்தில் பங்காளிகளுக்கு இடையில் முரண்பாடு

மறுசீரமைப்பு தொடர்பிலான தீர்மானங்களை எடுப்பது அரசாங்கத்துக்கு சொந்தமான தொழில்முயற்சி மறுசீரமைப்பு பிரிவா அல்லது அமைச்சரவையா என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ 'ட்விட்டரில்' கேள்வி எழுப்பியுள்ளார்.

வெற்றிகரமான மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு வெளிப்படைத்தன்மையும் தெளிவான பிரவேசமும் அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு பொருத்தமான நடைமுறை ஊடாக பொறுப்புக்கூறல் மற்றும் நியாயத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் எனவும் நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் 'ட்விட்டர்' பதிவு தொடர்பாக காலியில் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த அவர், இலங்கை உலகத்துடன் போட்டியிட வேண்டும். முழு தெற்காசியாவும் போட்டித்தன்மைக்கு சென்றுள்ள நிலையில், இலங்கை இதுவரை போட்டியில் இணையவில்லை என்றார்.

போட்டித்தன்மையுடன் கூடிய நடைமுறைக்கு செல்வதன் ஊடாகவே, மக்களுக்கு பங்குகளின் உரிமை கிடைக்கும். மக்களுக்கு இந்தப் பங்குகளின் உரிமையை வழங்க வேண்டும் எனவும் வஜிர அபேவர்தன வலியுறுத்தினார்.



# சடலங்களை அடக்கம் செய்யுமாறு அழுத்தம் கொடுக்கின்றனர்

ரஞ்சித் ராஜபக்ஷ

பெருந்தோட்டங்களில் திடீரென மரணக்கும் நபர்களின் சடலங்களை, மரண பரிசோதனைகளை முன்னெடுக்காது விடுவிக்குமாறு, திடீர் மரண பரிசோதகர்களுக்கு அரசியலில் இருப்போர் கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்கின்றனர் என்று திடீர் மரண பரிசோதரர்கள், அகில இலங்கை திடீர் மரண பரிசோதகர்களின் சங்கத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பெருந்தோட்டங்களில் இருக்கும் தொழிற்சங்கங்களின் தலைவர்களே தங்களுக்கு இவ்வாறு அழுத்தம் கொடுப்பதாக, திடீரென மரணிப்போரின் சடலங்களை விடுவிப்பதற்கு முன்னர், அந்தந்த பொலிஸின் ஊடாக அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும். அதற்கு முன்னர், மரணமடைந்தவர்களின் உறவினர்கள் அழைக்கப்பட்டு சாட்சி பெற்றுக்கொள்ளப்படும்.

எனினும், அந்தச் சாட்சிகளில் முன்னுக்குப் பின்னர் முரண்பாடு ஏற்பட்டிருந்தால், சடலங்கள் மரண பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சந்தர்பங்களிலேயே மரண பரிசோதனைக்கு உட்படுத்தாமல் சடலத்தை விடுவிக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கின்றனர் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதிர்காம பாதயாத்திரை

# காட்டுப்பாதை 27ஆம் திகதி வரை திறந்திருக்கும்

## ஜனா எம்.பியின் வேண்டுகோளுக்கு அமைய ஆளுநர் உத்தரவு

கே.எல்.ரி யுதாஜித்



உகந்தை வழி கதிர்காமப் பாதயாத்திரை காட்டுப்பாதை 12ஆம் திகதி திறக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் 25ஆம் திகதியுடன் மூடப்படவிருந்தது. ஆனால், மட்டக்களப்பில் பிரசித்திபெற்ற கோவில்களின் தீர்த்தோற்சவத்தில் கலந்துகொள்ளும் அடியார்களும் பாதயாத்திரையை மேற்கொள்ளும் வகையில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஜனாவின் வேண்டுகோளுக்கிணங்க, எதிர்வரும் 27ஆம் திகதி வரை திறந்து வைப்பதற்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவிக்கையில், அம்பாறை மாவட்ட செயலகத்தில், கிழக்கு மாகாண ஆளுநருடனான சந்திப்பின்போது, கதிர்காம பாதயாத்திரை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இங்கு, யாத்திரிகர்களின் நன்மை கருதி, ஆளுநரின் தலைமையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. உகந்தையில் இருந்து கதிர்காமம் வரையான காட்டுப்பாதை ஊடாக யாத்திரிகர்கள் செல்லும் போது, தொடர்ச்சியாக குடிநீர் வழங்கல் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும். நான்கு மைல்களுக்கு இடையிடையே தற்காலிக மலசல கூடங்கள் அமைக்கப்பட வேண்டும். தங்குமிடங்களுக்கு அருகே பெண்கள் உடைமாற்றும் கூடாரங்கள் அமைக்கப்பட வேண்டும் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

களுதாவளை பிள்ளையார் கோவில் உள்ளிட்ட சில கோவில்களின் தீர்த்தோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி இடம்பெற இருக்கின்ற நிலையில், காட்டுப் பாதையை மேலும் இரண்டு நாள்கள் நீட்டித்து, 27ஆம் திகதி மூடுமாறு கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆளுநர் சாதகமாப் பரிசீலித்து 27ஆம் திகதி காட்டுப் பாதை திறந்திருக்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்தார் என்று ஜனா எம்.பி தெரிவித்தார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர் தலைமறைவு

## முகாமையாளருக்கு விளக்கமறியல்

கனகராசா சரவணன்

வெளிநாட்டில் வேலை பெற்று தருவதாக பல பேரை ஏமாற்றி, ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாயை வாங்கி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர் தலைமறைவானதை அடுத்து, கைது செய்யப்பட்ட முகாமையாளரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் புதன்கிழமை (14) உத்தரவிட்டார்.

இதுபற்றி தெரியவருவதாவது: மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் அமைந்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்தின் உரிமையாளரும் முகாமையாளரும் துணைமுகவர்களும் இணைந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை பெற்று தருவதாகக் கூறி, பல பேரிடம் சுமார் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் பணத்தை பெற்றுக் கொண்டுள்ளனர்.

அவர்களில் சிலரை சுற்றுலா விசாவில் துபாய், கட்டார் நாடுகளுக்கு அனுப்பியுள்ள நிலையில், அங்கு சென்றவர்கள் தொழில் இல்லாது நடுவீதியில் நிர்க்கதியான நிலையில், தங்களது உறவினருடன் தொடர்பு கொண்டு, விமான சீட்டைப் பெற்று நாடுதிரும்பினர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்கள், தமது துணை முகவர்களுக்கு எதிராக மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்கள்.

இதையடுத்து, இரண்டு துணை முகவர்கள் கடந்த மாதம் கைது செய்யப்பட்டார்கள். இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தலா ஆறு இலட்சம் ரூபாய் வரை பெற்றுக் கொண்டு, அவர்களை மட்டக்களப்பிலுள்ள பிரதான முகவர் ஊடாக அனுப்பியதாகத் தெரியவந்ததையடுத்து, துணை முகவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, பிரதான முகவர் நிலையம் தொடர்பாக, விசாரணை செய்த பொலிஸார், அது சட்டவிரோதமாக இயங்கிவருவதாக தெரியவந்தது. இந்த நிலையில், அங்கு கடமையாற்றிய முகாமையாளர் நான்கு இலட்சம் ரூபாய்க்கு அதிகமான பணத்தை பெற்றதாக, இருவர் செவ்வாய்க்கிழமை (13) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, முகாமையாளரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த முகவர் நிலைய உரிமையாளர், வெளிநாட்டு வேலை பெற்று தருவதாக பலரிடம் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் வரை பெற்றுள்ளதாகவும் அவர் கொக்கட்டிச் சோலை, முனைக்காட்டைச் சேர்ந்தவர் எனவும் தற்போது தலைமறைவாகி உள்ளதாகவும் ஆரம்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

# நயினா தீவில் நகை கொள்ளை

நயினாதிவு ஐந்தாம் வட்டார பகுதியில் செவ்வாய்க்கிழமை (13) இரவு இரண்டு பெண்கள் வசித்துவரும் வீட்டில் அவர்கள் உறக்கத்தில் இருந்த போது, வீட்டுக் கூரையை பிரித்து, வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள், கைப்பையில் வைக்கப்பட்டிருந்த 22 பவுண் நகைகளை கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

காலை வீட்டினுடைய அறையை திறந்து பார்க்கின்ற போது, கைப்பை காணாமல் இருந்தமையால் அதிலிருந்து நகைகள் கைப்பையுடன் கொள்ளையடிக்கப்பட்டமை தெரிய வந்தநிலையில் ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

# சுனாமியில் தலைமறைவான மரண தண்டனை கைதி சிக்கினார்

சுமார் 20 வருடங்கள் தலைமறைவாக இருந்த 54 வயதுடைய மரண தண்டனை கைதி ஒருவர் ராகமவில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் மற்றும் அவரது சகோதரருமாக இருவரும் நபர் ஒருவரை 2001 ஆம் ஆண்டு கூரிய ஆயுதங்களால் தாக்கி, கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இதையடுத்து இரண்டு சகோதரர்களும் விளக்கமறியலில் இருந்தனர், 2004 சுனாமியைத் தொடர்ந்து, அவர்கள் நீர்கொழும்பு சிறைச்சாலையிலிருந்து வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

அவ்வாறு அவர்கள் வேறு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர் தப்பித்து தப்பிச் சென்றார்.

இந்நிலையில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபர் 2012 இல் விடுவிக்கப்பட்ட நிலையில், தப்பியோடியவருக்கு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரணதண்டனை விதிக்கப்பட்டவர் தலைமறைவாக இருந்த நிலையில், சுமார் இரண்டு தசாப்தங்களின் பின்னர் புதன்கிழமை (14) கைது செய்யப்பட்டார்.

# போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்க உதவவும்

க. அகரன்




வவுனியா, தரணிக்குளம் கிராமத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில், அதனை இல்லாதொழிக்க உதவுமாறு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபனிடம் கோரிக்கை முன்வைத்த கிராம மக்கள், கவனயீர்ப்பு போராட்டத்தில் புதன்கிழமை ஈடுபட்டனர்.

இதன்போது, போதை பாவனையில் தான் ஈடுபடுவதாகவும் தன்னை போதையில் இருந்து காப்பாற்றுமாறு கோரி, போதை பாவனையாளர் ஒருவரும் போராட்டத்தில் பங்கேற்றிருந்தார்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போதைக்கெதிரான பதாகைகளை ஏந்தியவாறு கூடியிருந்த நிலையில், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் அங்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினார்.

குறித்த கிராமத்தில், பயன்பாடற்ற காணிகளால் பாதுகாப்பின்மை மற்றும் இரவு நேரங்களில் திருடர்களின் அட்டகாசம் உட்பட போதை பாவனையாளர்களால் கிராமத்தவர்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினரிடம் எடுத்து கூறியதுடன் மகஜரொன்றையும் வழங்கினர்.

இந்நிலையில், பொலிஸார் இவ்விடயங்கள் தொடர்பில் அக்கறை கொள்வதில்லை என தெரிவித்த மக்கள், அதற்கும் நடவடிக்கை எடுக்க கோரியிருந்தனர்.




# 'சபா' ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில்

மு. தமிழ்ச்செல்வன்

ஈழத்துக் கலைஞர்களின் உருவாகத்திலும் நடிப்பிலும் வெளிவந்துள்ள 'சபா' திரைப்படம், கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (18) மாலை நான்கு மணி, ஆறு மணி, எட்டு மணி காட்சிகளாக திரையிடப்படவுள்ளது.

ஈழத்துக் கலைஞர்களை ஊக்குவித்து, அவர்களின் படைப்புகள் மேலும் மேலும் வளர, பொது மக்கள் தங்களின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என திரைப்படக் குழுவினர் கோரியுள்ளனர்.

# பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு

பதுளை கலன் தோட்டத்தில் முறையற்ற முகாமைத்துவம், நிர்வாக சீர்கேடு தொடர்பில் தொடர்ந்த பிரச்சினைகள் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் பதுளை தொழில் திணைக்களத்தில் தொழில் ஆணையாளருடன் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களுக்கும் கலன் தோட்ட அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சுமூகமாக தீர்த்துவைக்கப்பட்டது.



# காதலனுக்கு அஞ்சி குகையில் இருந்த காதலி

சுமணசிறி குணதிலக்க

தன்னுடைய காதலனுக்கு அஞ்சி, 13 வயதான காதலி, வீட்டுக்கு அண்மையிலுள்ள காட்டுக்குச் சென்று குகைக்குள் ஒருநாள் இரவை கழித்துள்ளார்.

இந்தச் சம்பவம் மொனராகலை, தொடகஹவெல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

13 வயதான சிறுமியின் வீட்டுக்கு வந்திருந்த காதலன், தான் காதலிக்கும் காதலியின் தாய்க்கும் அச்சுறுத்தல் விடுத்து சென்றுள்ளார். இதனால் அச்சமடைந்த சிறுமி, வீட்டுக்குத் தெரியாமல் காட்டுக்குச் சென்று குகையில் ஒளிந்துகொண்டுள்ளார்.

எனினும், மறுநாள் 11 ஆம் திகதி காலையில் பசி எடுத்தமையால் வீட்டுக்குத் திரும்பியுள்ளார். அச்சிறுமியை யாரும் தொந்தரவு செய்யவில்லை என சிறுமியின் தாய், பொலிஸில் தெரிவித்துள்ளார்.

ஏனெனில், தன்னுடைய மகளை காணவில்லையென, அந்தத் தாய், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பாடசாலைகளுக்கு

# போக்குவரத்து வசதி இன்மையுடன் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட 66 பாடசாலைகளில் ஒன்பது பாடசாலைகளுக்கு அதிபர்கள் இல்லாத நிலையில், கடந்த ஆறுமாத காலமாக இயங்கி வருவதாக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசப் பாடசாலைகளை உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் உள்ள 66 பாடசாலைகளில் கூடுதலான பாடசாலைகளில் அதிபர்களுக்கும் பாடரீதியான ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுவதாகவும் போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக, முக்கொம்பன் - பூநகரி ஊடாக அக்கராயன் வரையிலுமான போக்குவரத்து சேவைகள் சீரின்மையால், அந்த வீதி வழியாக இலகுவாக பயணிக்க கூடிய ஆசிரியர்கள், கிளிநொச்சி பஸ் நிலையத்துக்கு வந்தே அவர்கள் தங்களுடைய பயணங்களை செய்ய வேண்டியுள்ளனர். இவ்வாறு போக்குவரத்து நெருக்கடிகள், அதிபர்கள் இன்மை, ஆசிரிய ஆளணி இன்மை எனப் பல்வேறு நெருக்கடிகளை குறித்த பாடசாலைகள் எதிர்நோக்குவதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

# தலையைத் தூக்கும் கொரோனாவும் வேகமாகப் பரவும் டெங்குவும்

ஒவ்வொருவரும் சிந்திக்காவிட்டால் மாற்றங்களை ஏற்படுத்துவது என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கும் என்பனை நினைவில் கொள்ளவேண்டும். நமக்கென்ன, நாங்களும் எங்களைச் சுற்றியிருக்கும் சூழலும் சுத்தமாக இருந்தால் போதுமென நினைத்தால், முழு நாடே ஆபத்துக்குள் சிக்கிக்கொள்ளும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் கொரோனாவின் தாக்கம் சற்று குறைவாகவே இருக்கின்றது. எனினும், டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றனர். டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலர், பொரளை சீமாட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை அதிகமாகுமென புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், சீனாவிலும் பாகிஸ்தானிலும் கொரோனா தொற்று மிகவேகமாக பரவிவருவதாக அந்த நாடுகளின் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆகையால், அந்த நாடுகளுக்குச் சென்றுதிரும்புவோர். அங்கிருந்து வருவோரிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுப்பதை துரிதப்படுத்தவேண்டும்.

அதுமட்டுமன்றி, விமான நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனைகளை கடுமையாக்க வேண்டும். அத்துடன், ஏனைய சுகாதார நடைமுறைகளை அச்சொட்டாக அமலப்படுத்துவது தொடர்பில் அதிகாரிகள் அதிகசிரத்தை காட்டவேண்டும். மக்களும் முகக்கவசங்களை அணிவதில் அக்கறை காட்டுவது சிறந்ததாக அமையும்.

'வந்தப்பின் தடுமாறுவதை விடவும் வருமுன் காப்பதை' வழக்கப்படுத்திக் கொண்டால், பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும். தொற்றுநோய்களை இனங்கண்டுக்கொண்டு, அவற்றை பரப்பும் நுளம்புகள் பெருகும் இடங்களை கண்டறிந்து அழிக்கவேண்டும். டெங்கு நுளம்பு பெருகும் வகையிலான சூழலை உருவாக்கிவிடக்கூடாது.

டெங்கு நுளம்பு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவியான இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல, கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்களின் போது மிக முக்கியமான கருத்துகளை முன்வைத்துள்ளார். அதனை அச்சொட்டாக கடைப்பிடித்தால், டெங்கு நுளம்பின் தாக்கம் குறைவடையும்.

அத்துடன், டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து மற்றவருக்கு நுளம்புகள் மூலம் டெங்கு பரவுவதால், அனைத்து காய்ச்சல் நோயாளிகளையும் நுளம்புகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற விடயத்தை மக்களிடம் விரைவில் கொண்டு செல்ல வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் போன்று டெங்கு நோய்ப் பாதிப்பு உறுதிப்படுத்தப்படும் வரை காய்ச்சல் ஏற்பட்டுள்ள அனைத்து நோயாளிகளையும் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

வெளியில் தெரியாவிட்டாலும் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போல, மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. விலைகளும் அதிகமாகும். ஆகையால், தொற்றுநோய்களில் இருந்து தங்களைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்வதே சிறந்தது.

ஆகையால், எவ்வகையான நுளம்புகளாக இருந்தாலென்ன நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கிக்கொடுக்காமல் இருப்பதே சிறந்தது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

மனிதர்கள் தங்களைப் பற்றிய விடயங்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. அதாவது, சுயஅலசல் செய்துகொள்ள வேண்டும். நான் யார்? எப்படி வாழ்கின்றேன்? அன்பானவரா? சுயநலவாதியா, இரக்க குணம் உள்ளதா? கல்வியில் நாட்டம் உள்ளதா? அதீத ஆசைகள் கொண்டவரா? ஒழுக்கசீலரா போன்ற கேள்விகளைத் தனக்குத்தானே கேட்டு, உண்மையான விடையைத் தேடவெண்டும்.

உங்களுக்கு நீங்கள் எதிரியாகக்கூடாது. மனச்சாட்சிக்கு கௌரவம் அளிக்கவேண்டும். உங்களை நீங்களே அறிந்தால், உண்மைகள் வெளிப்படும்; கெட்டவைகளைத் துறந்துவிடுவீர்கள்.

வாழ்க்கை என்பது சிக்கலானது என எண்ணலாகாது. நல்லபடி வாழ்ந்தால் வாழ்க்கை சுலபமானது. தன்னைத்தான் வெறுக்கும் நிலை வரக்கூடாது.

அற வாழ்க்கை வாழ்ந்தால், உலகமே உங்களை நோக்கும். மானுடசக்தி அபாரமானது. நல்ல செயல்களைச் செய்யவல்லது. எதையும் எதிர்பார்க்காது சுயநலமற்ற வாழ்க்கையை உருவாக்க வேண்டும். புதுஉலகை நிர்மாணிக்கப் புறப்படுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### தடாகம் போல் காணப்படும் பிரதான வீதி



நுவரெலியா மாவட்டத்தில் டயகம போடைஸ் - ஹட்டன் செல்லும் பிரதான வீதி என்பது மிகவும் முக்கியமான பாதையாகும். இப்பாதையை சுமார் 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தினசரி பயன்படுத்தி வருகின்றனர். இருந்த போதிலும், தற்போது இப்பாதை மிகவும் ஆபத்தான நிலையில், குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன், மழைக்காலங்களில் குழிகளில் வெள்ளம் நிறைந்து நிற்பதால், சாரதிகள் வாகனங்களை செலுத்த முடியாமல் தடுமாற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் வீதி, தடாகம் போல் காட்சியளிக்கின்றது. இப்பாதையைப் புனரமைக்கும் பணி, இரண்டு வருடங்களுக்கு முன்பு ஜீவன் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அரசாங்கம் மாறியதால் இப்பாதை செப்பனியிடும் பணி கைவிடப்பட்டது. பாதையில் இரு பக்கங்களிலும் கான்கள் வெட்டப்பட்டு, அவையும் முழுமை பெறாத நிலையில் உள்ளன. கடந்த காலங்களில் இப்பாதையில் அதிகமான பஸ் விபத்துகள் இடம்பெற்றமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

பல மாவட்டங்களில் பாதை அபிவிருத்தி, அரசாங்கத்தால் முறையாக செய்து கொடுத்த போதிலும், மலையக பிரதேசத்தில் பாதை அபிவிருத்தி என்பது எட்டாக் கனியாகவே உள்ளது. மலையக அரசியல்வாதிகள், உடனடியாக இப்பாதையை புனரமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– துவாரக்ஷான்

கறுப்பு ஜூலை நாற்பதாண்டுகளின் பின்னர் – 05

# கலவரப்படுத்தும் கலவரங்கள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தமிழர்களின் மீது 1983இல் நடந்தேறிய இனவன்முறை, இலங்கை இனமுரண்பாட்டின் வரலாற்றில் முக்கியமானதொரு புள்ளி.

இன்றுவரை அந்நிகழ்வு கலவரம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் அது 1983 riots, Anti-Tamil riots, ethnic riots என்றவாறான பெயர்களால் அழைக்கப்பட்டு வருகிறது. ஆய்வாளர்கள், வரலாற்றாசியர்கள், ஊடகத்துறையினர் என அனைவரும் இதை ஒரு கலவரம் என்றே அழைக்கிறார்கள். தமிழில் கூட, '83 கலவரம்', 'ஆடிக்கலவரம்', 'ஜூலைக் கலவரம்' என்றே சொல்லப்படுகிறது. இது உண்மையில் தவறானது.

1983இல் நடைபெற்றது தற்செயலான நிகழ்வு அல்ல. எழுந்தமானமாக மக்கள் கலவரத்தில் ஈடுபட்ட நிகழ்வல்ல. மாறாக, அது மிகவும் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட ஒன்று. அது குறித்த விரிவான விடயங்களை இத்தொடரில் இனிவரும் பகுதிகளில் நோக்கலாம்.

கலவரம் என்கிற போது, திட்டமிடப்படாத, மக்களின் தன்னெழுச்சியான, அரசின் வகிபாகம் இல்லாத செயல் என்று பொருள் தரும். இந்தக் கதையாடலையே ஜே.ஆரும் அரசில் இருந்த மற்றையோரும் சிங்களக் கடும்போக்காளர்களும் விரும்பினர். ஏனெனில், இது அரசின் பொறுப்புக்கூற வேண்டிய தன்மையைக் குறைக்கிறது. அரசு, மக்கள் மீது பழியைப் போட்டு, தனது கைகளைக் கழுவிக் கொள்ள இது வாய்ப்பானது. துரதிர்ஷ்டவசமாக இந்தத் தீயநோக்கத்துக்கு நாம் பலியானோம்; இன்னும் பலியாகின்றோம்.

இதை உண்மையில் ஆங்கிலத்தில் Anti-Tamil pogrom என்று அழைப்பதே சரியானது. இச்சொல்லாடலே இந்நிகழ்வுக்கான சரியான பொருளைத் தரவல்லது. Pogrom என்பது ஓர் இனக்குழு மீதான திட்டமிட்ட வன்முறையும் படுகொலைகளையும் குறிக்கும். வரலாற்றின் வழி நின்று நிகழ்வுகளைக் குறிக்கும் போது, நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லிலும் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்கு இது நல்லதொரு சான்று.

இலங்கையின், 1983 ஜூலை வன்செயலுக்கு முன்னர், அதற்கொரு நீண்ட வரலாறு உண்டு. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகள், இலங்கையின் இருபதாம் நூற்றாண்டும் குறிப்பான இனத்துவ உறவுகளின் எதிர்காலமும் எப்படி இருக்கப் போகின்றது என்பதைக் காட்டி நின்றன.

குறிப்பாக, இக்காலப்பகுதியில் இடம்பெற்ற கலவரங்கள் முக்கியமானவை. ஆனால், இவை கவனம் பெறவில்லை. 1815இல் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியோடு இலங்கை முழுமையாகப் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் போன பின்னர், 1818 ஊவா-வெல்லச கலகமும் 1848இல் இடம்பெற்ற மாத்தளைக் கலகமும் வரலாற்றில் முக்கிய இடம்பெற்றுள்ளன. இவை இரண்டும் கிளர்ச்சிகளாகவும் எழுச்சிகளாகவும் கொள்ளப்படுகின்றன.

ஆனால், 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளில் இடம்பெற்ற கலவரங்கள் குறித்துக் கவனம் கொள்ளப்படவில்லை. 1883இல் கொச்சிக்கடையில் இடம்பெற்ற பௌத்த-கத்தோலிக்க முரண்பாட்டின் விளைவான கலவரம் குறித்த சில குறிப்புகளுக்கு வெளியே, இலங்கையின் கலவரங்கள் குறித்த விரிவான குறிப்புகளோ, ஆய்வுகளோ இல்லை.

1983 வன்செயல்களுக்கு ஒரு தொடக்கமும் தொடர்ச்சியும் இருக்கிறது. 1815இல் கண்டியின் வீழ்ச்சியின் எதிர்வினையாக பிரித்தானிய கொலனியாதிக்கத்துக்கு எதிராக 1818, 1848ஆம் ஆண்டுகளில் கிளர்ச்சிகள் இடம்பெற்றிருந்த நிலையில், 1915இல் முல்லிம்களுக்கு எதிரான கலவரம் எவ்வாறு சாத்தியமானது? பிரித்தானியரை எதிர்க்கும் மனநிலை இல்லாமலாகி, இலங்கையருக்கு உள்ளேயே முரண்படும் நிலை எவ்வாறு ஏற்பட்டது? இவை, இன்றுவரை இலங்கையின் இனமுரண்பாட்டை நோக்குவோர் ஆழமாகப் பார்க்கத் தவறியவையாகும்.

1818, 1848 கிளர்ச்சிகள் இன்றும் இலங்கை வரலாற்றின் தேசப்பற்றின் உச்ச நிகழ்ச்சிகளாகக் கொண்டாடப்படுகின்றன. சிங்கள-பௌத்த உணர்வைத் தூண்டும் விதமாகவே, இந்தக் கிளர்ச்சிகள் பற்றிய கதைகள் தொடர்ந்து சொல்லப்படுகின்றன.

1818ஆம் ஆண்டு கிளர்ச்சியை ஆழ்ந்து நோக்கினால், அது மக்களின் முழுமையான ஆதரவுடன் நடைபெற்ற கிளர்ச்சியல்ல. மாறாக, 1815 கண்டிய மன்னனைக் காட்டிக்கொடுத்து, பிரத்தானிய கொலனியாதிக்கவாதிகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம், கண்டியின் ஆட்சியைக் கைப்பற்ற எண்ணியிருந்த பிரதானிகளின் எதிர்பார்ப்பில், கண்டிய உடன்படிக்கை மண்ணை போட்டது.

அந்தப் பிரதானிகளது செல்வாக்கு, மெதுமெதுவாக பிரித்தானியர் ஆட்சியில் தளரத் தொடங்கியது. பல பிரித்தானிய நடைமுறைகள் வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் வழக்கில் இருந்தவற்றை மாற்றத் தொடங்கியது. இதனால் ஒரு சமூக மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இது பிரதானிகளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை.

அவர்கள் தங்களுக்கு கீழே உள்ள மக்களைத் திரட்டியே, இந்தக் கிளர்ச்சியை நடத்தினர். அதேவேளை, இந்தக் கலவரத்துக்கு உடனடிக் காரணமாகவும் மக்களைத் திரட்ட வாய்ப்பாகவும் அமைந்த நிகழ்வொன்று முக்கியமானது.

1817 செப்டெம்பரில் பிரித்தானியர், ஹாஜி மரிக்கார் ட்ரவலா என்ற இஸ்லாமியரை வெலச பகுதிக்கு பிரதம அதிகாரியாக (முகாந்திரம்) நியமித்தனர். இப்பதவி கண்டிய பிரதானிகளுக்கு வழங்கப்படுவது. இந்நிலையில், இப்பதவியை ஓர் இஸ்லாமியருக்கு பிரித்தானியர் வழங்கி, பௌத்தத்தையும் சிங்களவர்களையும் அவமதித்து விட்டார்கள் என்ற கருத்து மக்களிடையே பரப்பப்பட்டு, இதன்வழியும் கிளர்ச்சிக்கு ஆதரவு திரட்டப்பட்டது.

இந்தச் செய்தி முக்கியமானது. கண்டிய பிரதானிகளே இலங்கை முழுமையாக பிரித்தானியர் ஆட்சிக்கு உட்பட்ட பின்னர், தம்நலனுக்காக இனத்துவ வேறுபாடுகளைத் தோற்றுவித்தார்கள். இந்த விதைதான் 1983இல் விருட்சமாகி நின்றது.

அதைப்போலவே, 1848ஆம் ஆண்டு கிளர்ச்சியானது, விவசாயிகளின் கிளர்ச்சியாக இருந்த போதும், இதில் நடைபெற்ற இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

முதலாவது, 26 ஜூலை 1848இல் தம்புள்ள விகாரையில் தலைமைப் பிக்குவால், கொங்கலகொட பண்டா மன்னராக முடிசூடப்பட்டார். அப்போது அங்கு கூடியிருந்த மக்களிடம் பண்டா, "உண்மையான பௌத்தனாக என்னுடன் நிற்கப் போகிறீர்களா, அல்லது கிறிஸ்தவ பிரித்தானியர்களுடன் நிற்கப் போகிறீர்களா" என்று கேட்டதாகக் குறிப்புகள் உண்டு.

இரண்டாவது, கிளர்ச்சி தோல்வியடைந்து பண்டா ஒளிந்திருந்த போது, அவனைத் தேடிக் கண்டுபிடித்தவர்கள் பிரித்தானியரிடம் கடமையாற்றிய மலாயப் படையணியாகும். எனவே சிங்களத் தேசியவாத எழுத்துகள், 1848 கிளர்ச்சிக்கு எதிராக, முஸ்லிம்கள் வேலை செய்தார்கள் என்றவொரு கதையாடலையும் பரப்பி வந்திருக்கின்றன.

இதன் பின்னர், 1850களுக்குப் பிறகு 1915 வரை நடைபெற்ற கலவரங்கள் குறித்து இலங்கை வரலாறு கவனம் கொள்ளாதது தற்செயலானதல்ல.

1866ஆம் ஆண்டு இலங்கையில் தானியக் கலவரம் ஒன்று நிகழ்ந்தது. இது குறித்து மிகவும் குறைவான தகவல்களே கிடைக்கின்றன. அரிசிப் பற்றாக்குறையின் காரணமாக இந்தக் கலவரம் நிகழ்ந்தது. அக்காலப்பகுதியில் இலங்கைக்குத் தேவையான அரிசி தென்னிந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. 1866ஆம் ஆண்டு விளைச்சல் பாதிப்படைந்ததால் அரிசியின் விலை பலமடங்கு அதிகரித்தது.

இந்நிலையில் 1866 ஒக்டோபர் 23ஆம் திகதி, கொழும்பின் செட்டியார் தெருவில் இருந்த அரிசிக் கடைகள் தாக்கப்பட்டன. இந்தக் கடைகள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குச் சொந்தமானவை. அவர்களே இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து, மொத்த விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் திட்டமிட்டு விலையை ஏற்றுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, செட்டியார் தெருவில் இருந்த கடைகள் சூறையாடப்பட்டன. கடைகளில் இருந்த ஏனைய பொருட்களான பணம், நகை உள்ளிட்ட அனைத்தும் களவாடப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, அப்பகுதியில் இருந்த முஸ்லிம்களின் கடைகளும் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன. சிங்களவர்கள் ஊர்ப் பகுதிகளில் இருந்தும் வந்து கொள்ளையிட்டனர். மறுநாள், நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் முஸ்லிம்களும் இணைந்து, இதற்கு எதிர்வினையாற்றத் தொடங்கினார்கள். இதனால் கலவரம் கொழும்பில் கட்டுக்குள் வந்தது.

ஆனால், சில நாள்களின் பின்னர், கடுவெல பகுதியில் முஸ்லிம்களின் அரிசிக் கடைகள், சிங்களவர்களால் சூறையாடப்பட்டன. இந்தக் கலவரம் இலங்கை வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களில் ஒன்றாகும்.

1870இல் மருதானையில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஒரு கலவரம் இடம்பெற்றது. காதல் விவகாரம் கலவரமாகி, 1867இல் மருதானையில் உருவாக்கப்பட்ட பொலிஸ் தலைமை அலுவலகம், முஸ்லிம்களால் தாக்கப்படுமளவுக்கு நிலைமை மோசமடைந்தது.

இதற்குக் காரணமான தனிநபர்களில் ஒருவர் சிங்களவர்; கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர். மற்றையவர் முஸ்லிமாக மதம் மாறிய தமிழர். இந்தக் கலவரத்தின் தொடர்ச்சியாகவே, இலங்கையில் 1870இல் குற்றப்புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டது.

இதற்கு அடுத்தாக, 1883இல் மட்டக்களப்பில் ஒரு கலவரம் நடைபெற்றது. அங்குள்ள மீனவ சமூகத்துக்கும் கள்ளிறக்கும் சமூகத்துக்கும் இடையிலான சாதிச் சண்டை கலவரமானது. இதையும் இதே ஆண்டு நிகழ்ந்த கொச்சிக்கடைக் கலவரத்தையும் அடுத்த வாரம் நோக்குவோம்.




ஏழாவது CIPM சர்வதேச ஆய்வு மாநாடு 2023 க்கு

# SLT-MOBITEL அனுசரணை

SLT-MOBITEL, 7ஆவது CIPM சர்வதேச ஆய்வு மாநாடு 2023 நிகழ்வுக்கு தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் அனுசரணை வழங்கியிருந்தது. இந்த ஆண்டின் நிகழ்வு, மெய்நிகர் மற்றும் நேரடி பங்குபற்றலுடன், ஹைபிரிட் நிகழ்வாக நடைபெற்றது. இல. 43, விஜய குமாரதுங்க மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரியில் அமைந்துள்ள HR House இலுள்ள CIPM கேட்போர்கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

'எதிர்காலப் பணியை மாற்றியமைப்பது' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில், உள்நாட்டையும், சர்வதேச ரீதியிலான நிபுணர்கள், புலமையாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மனித வளங்கள் முகாமைத்துவத்தில் பின்பற்றப்படும் புத்தாக்கமான வழிமுறைகள் மற்றும் உள்ளார்ந்த அம்சங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கான பிரத்தியேகமான கட்டமைப்பாக உள்ளது.

CIPM பட்டதாரிகள் முதல் அரச மற்றும் அரசு சாரா பல்கலைக்கழகங்களின் புலமையாளர்கள் அடங்கலாக மனித வளங்கள் நிபுணர்களின் நூறு ஆய்வுப் பத்திரங்களை இந்த மாநாடு பதிவு செய்திருந்தமையால், இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

இந்த மாநாட்டில் பங்கேற்றிருந்த முக்கியத்துவம் வாய்ந்த நபர்களில், SLT-MOBITEL இன் குழும பிரதம கூட்டாண்மை அதிகாரி பிரபாத் அம்பேகொட அடங்கியிருந்தார். இவர் குழுநிலை கலந்துரையாடலிலும் பங்கேற்றார். இவரின் பங்கேற்பானது பெறுமதி வாய்ந்த கலந்துரையாடலையும் பெறுமதி வாய்ந்த உள்ளார்ந்த தகவல்களையும் ஊக்குவித்திருந்தன.

SLT இன் திறன் விருத்தி நிலையத்தின் பிரதி பொது முகாமையாளரும் தேசிய மனித வளங்கள் தரவு மையத்தின் CIPM செயற்குழுவின் அங்கத்தவரும், ஆய்வு மற்றும் விருத்தி ஆற்றல்களையும் கொண்ட ஆசிரி இந்திக 'Case Study Publication Book 2023'ஐ CIPM இன் தலைவர் கென் விஜயகுமாரிடம் கையளித்திருந்தார்.

SLT இன் பொறியியலாளரும் திறன் விருத்தி செயற்பாட்டாளருமான ஸ்ரீவி சந்தமினி, 'Developing Competency Assessment and Development Framework for Staff Engaged in Sales Sri Lanka Telecom PLC' எனும் தலைப்பில் அமைந்த ஆய்வுப் பத்திரத்தை வெளியிட்டிருந்தார்.


இந்த மாநாட்டின் போது, SLT-MOBITEL அணியினரின் இந்தக் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புகளினூடாக, தொழிற்துறையில் நிறுவனத்தின் உறுதியான பிரசன்னத்தையும் செல்வாக்குச் செலுத்தலையும் மேலுதி உறுதி செய்யப்பட்டிருந்தது.

7ஆவது CIPM சர்வதேச ஆய்வு மாநாட்டினூடாக, மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாட்டாளர்கள், புலமையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு தமது ஆய்வு கண்டறிதல்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் பகிர்ந்து, பெறுமதி வாய்ந்த வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

மனித வளங்கள் முகாமைத்துவ ஆய்வு ஆற்றல்களில் கவனம் செலுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டினூடாக, பங்குபற்றுநர்களுக்கு சவால்கள் நிறைந்த பொருளாதார சூழலில் தமது நிபுணத்துவம் மற்றும் தந்திரோபாயங்களை வெளிப்படுத்த வலுவூட்டப்பட்டது.

யூனியன் அஷ்யூரன்ஸ் 2023 முதல் காலாண்டில்

# சிறந்த நிதிப் பெறுபேறுகள் பதிவு




யூனியன் அஷ்யூரன்ஸ், 2023 முதல் காலாண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. சவால்கள் நிறைந்த தொழிற்படு சூழலிலும், சகல பிரதான வினைத்திறன் அளவுகோல்களிலும் சிறந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்ததனூடாக, தனது பங்காளர்களுக்கு ஒப்பற்ற பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் நிறுவனம் கொண்டிருக்கும் உறுதியான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வரிக்கு முந்திய இலாபத்தில் 117% அதிகரிப்பு பதிவாகியிருந்ததுடன், 2022 முதல் காலாண்டில் பதிவாகியிருந்த ரூ. 279 மில்லியனிலிருந்து 2023 முதல் காலாண்டில் ரூ. 605 மில்லியனாக உயர்ந்திருந்தது. இந்த உயர் வளர்ச்சியினூடாக நிறுவனத்தின் தந்திரோபாய திட்டங்கள் மற்றும் சந்தையில் காணப்படும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளல் ஆகியன வெளிப்படுத்தப்பட்டிருந்தன. நிறுவனத்தின் மொத்த தேறிய வருமானம் முன்னைய நிதியாண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 4.7 பில்லியனிலிருந்து 2023 முதல் காலாண்டில் ரூ. 6.5 பில்லியனாக 37% உயர்ந்திருந்தது. அதனூடாக நிலைபேறான வளர்ச்சி தொடர்பில் நிறுவனத்தின் நோக்கு உறுதி செய்யப்பட்டிருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸின் தேறிய முதலீட்டு வருமானமும் துரித வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. 2022 முதல் காலாண்டில் பதிவாகியிருந்த ரூ. 1.4 பில்லியனிலிருந்து ரூ. 2.4 பில்லியனாக உயர்ந்திருந்தது. இதனூடாக, முதலீடுகளை நிர்வகிப்பதில் நிறுவனம் கொண்டுள்ள நிபுணத்துவம் மற்றும் காப்புறுதிதாரர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு உயர் வருமதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் காணப்படும் ஆற்றல்கள் உறுதி செய்யப்பட்டிருந்தன. மேலும், 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், நிகர வழங்கிய தவணைக்கட்டணம் மற்றும் தேறிய வழங்கிய தவணைக்கட்டணம் ஆகியனவும் வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன. இதில் நிகர வழங்கிய தவணைக்கட்டணம் ரூ. 3.9 பில்லியனிலிருந்து ரூ. 4.2 பில்லியனாகவும், தேறிய வழங்கிய தவணைக்கட்டணம் ரூ. 3.8 பில்லியனிலிருந்து ரூ. 3.9 பில்லியனாகவும் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும், நிறுவனத்தின் உறுதியான நிதிப் பெறுபேறுகளை உறுதி செய்யும் வகையில், நிகர வழங்கிய தவணைக் கட்டணம் 4.8% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் துறைசார் சராசரி பெறுமதியை விஞ்சும் வகையில் அமைந்திருந்தது. சந்தை மூலதனவாக்கப் பெறுமதி என்பதும் 2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் ரூ. 16.4 பில்லியனிலிருந்து ரூ. 19.4 பில்லியனாக உயர்ந்திருந்தது. இது 18% வளர்ச்சியாகும். உரிமைகோரல்களை நிறைவேற்றும் கடப்பாட்டை உறுதி செய்யும் வகையில், முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 1.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் ரூ. 1.6 பில்லியன் பெறுமதியான உரிமைகோரல்கள் செலுத்தப்பட்டிருந்தன.

நிறுவனத்தின் சிறந்த தொழிற்பாட்டு வினைத்திறன் பெறுபேறுகளினூடாக அதன் வெற்றிகரமான செயற்பாடு மேலும் உறுதி செய்யப்பட்டிருந்தது. செயற்பாடுகளினூடாக இலாபம் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 122% அதிகரிப்பைப் பதிவு செய்திருந்ததுடன், ரூ. 240 மில்லியனிலிருந்து ரூ. 534 மில்லியனாக உயர்ந்திருந்தது.

பங்கொன்றின் மீதான வருமதி ரூ. 0.37 முதல் ரூ. 0.75 ஆக உயர்ந்திருந்தது. இது 105% அதிகரிப்பு என்பதுடன், பங்காளர் பெறுமதியை மேலும் உயர்வடையச் செய்திருந்தது. நிறுவனத்தின் மொத்த சொத்துகளின் பெறுமதி 2023 மார்ச் மாத இறுதியில் ரூ. 79 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தப் பெறுமதி ரூ. 76 பில்லியனாக காணப்பட்டது. மார்ச் மாத இறுதியில் மூலதன போதுமை விகிதம் 245% ஆக காணப்பட்டதுடன், ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட உயர்வாக காணப்பட்டது. மேலும், ஆயுள் காப்புறுதி நிதியம் ரூ. 57.3 பில்லியனாக பதிவாகியிருந்ததுடன், உறுதியான நிதிசார் அடித்தளத்தையும் பிரதிபலித்திருந்தது.







## கல்முனை மாநகர சபையின் விருது விழா

கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான விருது விழா, கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி தலைமையில் புதன்கிழமை (14) நடைபெற்றது.

இதன்போது, மாநகர சபையின் 14 துறைகளில் அதிசிறந்த ஊழியர்கள் 14 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ மேற்பார்வையாளரான எம்.எம் நிஸ்வான், அதிசிறந்த ஊழியராக தெரிவு செய்யப்பட்டு, விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். நிர்வாக உத்தியோகத்தர்களாக கடமையாற்றி, ஓய்வு பெற்றுள்ள எம்.ஏ றஹீம், ஆனந்தகௌரி கந்தசாமி உள்ளிட்ட ஆறு உத்தியோகத்தர்களும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஊழியரால், 'ஆளுமைக்கான அடையாளம்' என்ற மகுடம் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மிக்கு சூட்டப்பட்டு, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

- ஏ.எம் அஸ்லம்

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்




மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் காணப்படும் சிறுவர் சபைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (14) நடைபெற்றது.

இந்நிகழ்வில், யுனிசெப் நிறுவன விசேட சிறுவர் பாதுகாப்பு நிபுணர் மரிண்டா ஆம்ஸ்ட்ரோங், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சியாஹுல்ஹக், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் ரீ. மதிராஜ், மாவட்ட முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. முரளிதரன், தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் நிஷா, உளவள இணைப்பாளர் ஜனார்தனி நரசிம்மன், செரி நிறுவன பணிப்பாளர் தர்ஷன் மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

- ஏ.எச்.ஏ ஹுஸைன்




## சேய் பகல் பராமரிப்பு நிலையம்

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல்கள் அமைச்சின் ஊடாக கடந்த ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சேய் பகல் பராமரிப்பு நிலையம் மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் புதன்கிழமை (14) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல் கலந்து கொண்டிருந்தார். இந்த, சேய் பராமரிப்பு நிலையம், புனித ஜோசேவாஸ் சபை அருட்சகோதரிகளால் பராமரிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- எஸ். றொசேரியன் லெம்பேட்

## சின்னம்சூட்டி, பாராட்டி, கௌரவம்




மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த 5மாணவர்களுக்கு சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது கிடைத்துள்ளதுடன் அவர்களுக்கு சின்னம் சூட்டி, பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியில் அதிபர் இராசதுரை பாஸ்கர் தலைமையில் புதன்கிழமை (14) நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாரணர் தலைமைச் செயலகத்தின் கிழக்கு மாகாண உதவி ஆணையாளர் பீ. சசிக்குமார், மாவட்ட சாரண ஆணையாளர் தேசகீர்த்தி வீ. பிரதீபன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரும் மட்டக்களப்பு நகர மக்கள் வங்கி முகாமையாளருமான நாகலிங்கம் தினேஸ்குமார், குழு சாரண தலைவர் எம். சந்திரசுசர்மன், குருளை சாரண தலைவர் ந. பிரதீபன் உட்பட பாடசாலையின் சாரண ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

- க. விஜயரெத்தினம்

## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு




திருகோணமலை, சென் மேரிஸ் கல்லூரியில் கற்கும் தெரிவுசெய்யப்பட்ட 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (15) இடம்பெற்றது. திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கு அமைவாக, உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளனின் முயற்சியின் பயனாக, மறைந்த சுரேஸ்குமாரின் நினைவாக கந்தையா தொண்டு நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன், மாவட்ட செயலக சமூக சேவை திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

- ஹஸ்பர்



அமெரிக்கா

அமெரிக்காவில் செல்வந்தராகுவதற்கு

# இவ்வளவு பணம் தேவையா?

அமெரிக்காவில் பணக்காரராக வேண்டும் என்றால் 2.2 மில்லியன் பெறுமதியான சொத்து வைத்திருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

அமெரிக்காவின் பிரபல நிதி சேவை நிறுவனமான 'சார்ள்ஸ் ஷ்வாப்' நிறுவனம், அமெரிக்காவில் பணக்காரர்களுக்கான சொத்து மதிப்பு தொடர்பாகவும், பணக்காரர்கள் பட்டியலில் இணைய வேண்டுமானால் அதற்கு தேவைப்படும் நிகர சொத்து மதிப்பு குறித்தும் கணக்கெடுப்பு நடத்திய போது, இந்த விடயத்தை தெரிவித்துள்ளது,

ஆனால், இந்தக் கேள்விகளுக்கு பதில் அளித்தவர்களில் 48 சதவீதமானோர் தங்களிடம் சராசரி நிகர சொத்து மதிப்பு 5 இலட்சத்து 60 ஆயிரம் டொலர் என்ற அளவில் இருக்கும் போதே, தாங்கள் ஏற்கெனவே செல்வந்தர்களாக உணர்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த கேள்விக்கு பதிலளித்த மக்கள், பல விதமான சுவாரஸ்யமான பதில்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏதென்ஸ்

## படகு கவிழ்ந்ததில் 78 பேர் உயிரிழப்பு



கிரீஸ் அருகே அகதிகள் படகு கவிழ்ந்த விபத்தில் 78 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவித்த கிரீஸ் கடலோர காவல்படை அதிகாரிகள், "கிரீஸ் கடற்கரையில் இருந்து 47 கடல் மைல் தொலைவில் அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. கடல் சீற்றம் காரணமாக இந்த விபத்து நேரிட்டுள்ளது. இதில் படகில் வந்தவர்களில் குறைந்தபட்சம் 78 பேர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

கடல் சீற்றம் காரணமாக மீட்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால், கடலில் மூழ்கியவர்கள் குறித்த சரியான தகவல் இன்னும் உறுதியாகவில்லை. உயிரிழப்புகள் அதிகரிக்கலாம்.

இந்தப் படகு லிபியாவில் இருந்து கிரீஸ் நோக்கி வந்துள்ளது. இத்தாலியில் தயாரிக்கப்பட்ட இந்தப் படகு, லிபியாவின் டோப்ருக் பகுதியில் இருந்து புறப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்தப் படகில், எத்தனை பேர் பயணித்தனர் என்பது குறித்த தகவல் இன்னும் கிடைக்கவில்லை. மீட்புப் பணியில் கடலோர காவல் படையைச் சேர்ந்த 6 கப்பல்களும், ஒரு கடற்படை கப்பலும் ஈடுபட்டுள்ளன. இந்தப் படகில் எகிப்து, சிரியா, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகம் இருந்துள்ளனர்" என தெரிவிக்கப்படுகின்றது.



வொஷிங்டன்

## விண்வெளியில் பூத்த பூ

விண்வெளியில் பூத்த பூவின் படத்தை 'நாசா' பகிர்ந்துள்ளது. இது விண்வெளி வீரர்களுக்காக பரிசோதனை முயற்சியாக வளர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகள், விண்வெளியில் தங்கள் ஆதிக்கத்தை செலுத்தும் நோக்கில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. பிற கிரகங்களில் மனிதர்கள் வாழும் சாத்தியக்கூறுகள் தொடங்கி, அந்தக் கோள்களில் நீர் உள்ளதா என்பது வரையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியேற்றும் ஆராய்ச்சிகளும் நடைபெறுகிறது.

அப்படி மனிதர்கள் பிற கிரங்களுக்கு செல்லும் போது அவர்களுக்கு உதவும் வகையில் சோதனை முயற்சியாக விண்வெளியில் தோட்டம் அமைத்து செடிகள் வளர்க்கப்படுகிறது. என நாசா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம்

## மீன்பிடி தடைக்காலம் முடிந்தது

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை பகுதிகளில் அமலில் இருந்த 2 மாத மீன்பிடித் தடைக்காலம் நேற்றுடன் நிறைவடைந்தது. இதையடுத்து வியாழக்கிழமை (15) முதல், விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்கின்றனர்.

மீன்களின் இனப்பெருக்கத்துக்காக ஆண்டுதோறும் கோடை காலத்தில் 2 மாதங்கள் விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்ல மத்திய, மாநில அரசுகள் தடை விதிக்கும். இந்த ஆண்டு ஏப்.15இல் தொடங்கி ஜூன் 14 வரை 61 நாள்கள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை




பகுதியில் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டது.

மீனவர் குடும்பங்களுக்கு தலா ரூ.6 ஆயிரம் வீதம் மீன்பிடித் தடைக்கால நிவாரணம் தமிழக அரசால் வழங்கப்பட்டது.

தடைக் காலத்தில் மீனவர்கள் தங்கள் படகுகள், வலைகளைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். தொழில் பாதிப்பு காரணமாக கடந்த 2 மாதங்களாக மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை இரு மடங்கு உயர்ந்தது.

ஹைதராபாத்

## படிக்கச்சென்ற பெண் குத்திக்கொலை



இலண்டனுக்கு படிக்கச் சென்ற ஹைதராபாத்தை சேர்ந்த இளம்பெண், பிரேஸில் நாட்டை சேர்ந்த ஓர் இளைஞரால், கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார். மற்றொரு பெண்ணும் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஹைதராபாத், ராம் நகர் பகுதியை சேர்ந்தவர் தேஜஸ்வினி (27). இவர் பட்ட மேற்படிப்பு (எம்.எஸ்) படிக்க கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் இலண்டன் சென்றார். அங்கு தேஜஸ்வினி தனது தோழி அகிலா மற்றும் மேற்கு வங்கத்தை சேர்ந்த பெண் ஒருவருடன் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளார். ஒரு வாரத்துக்கு முன்பாக, பிரேஸிலை சேர்ந்த இளைஞர் ஒருவர், அவரது தோழியுடன் இந்த வீட்டில் வந்து தங்கியுள்ளார். அவரே குத்தியுள்ளார்.

எல்.பி.எல் ஏலம்

# ஜஃப்னா கிங்ஸில் வியாஸ்காந்த், தேனுரதன், தீசன் விதுசன்



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) ஏலமானது நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், ஜஃப்னா கிங்ஸால் யாழின் விஜயகாந்த் வியாஸ்காந்த், தீசன் விதுசன் மற்றும் மட்டக்களப்பின் ரட்ணராஜா தேனுரதன் ஆகியோர் ஏலமெடுக்கப்பட்டனர்.

இந்த ஏலத்தில் அதிகபட்சமாக டில்ஷான் மதுஷங்க 92,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு கிங்ஸால் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

ஏலத்தின் முடிவில் ஐந்து அணிகளின் குழாம் பின்வருமாறு,


பி-லவ் கண்டி: முஜீப் உர் ரஹ்மான், வனிடு ஹஸரங்க, பக்கர் ஸமன், அஞ்சலோ மத்தியூஸ், இசுரு உதான, தினேஷ் சந்திமால், மொஹமட் ஹஸ்னைன், துஷ்மந்த சமீர, சஹான் ஆராச்சிகே, அஷேன் பண்டார, மொஹமட் ஹரிஸ், நவோத் பரணவிதான, ஆசிஃப் அலி, கமிந்து மெண்டிஸ், நுவான் பிரதீப், சத்துரங்க டி சில்வா, லஹிரு மதுஷங்க, ஆமிர் ஜமால், மல்ஷா தருபதி, தனுக டப்ரே, லசித் அபேரத்னே, அவிஷ்க தரிந்து.

ஜஃப்னா கிங்ஸ்: டேவிட் மில்லர், திஸர பெரேரா, ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ், மகேஷ் தீக்‌ஷன, சரித் அஸலங்க, டுனித் வெல்லலாகே, ஷொய்ப் மலிக், பதும் குமார, விஜயகாந்த் வியாஸ்காந்த், தீசன் விதுஷன், அஸங்க மனோஜ், நிஷான் மதுஷ்க, அசித பெர்ணாண்டோ, ஹார்டஸ் விலோஜின், நுவான் துஷார, டில்ஷான் மதுஷங்க, ஸமன் கான், அஷான் ரந்திக, ரட்ணராஜா தேனுரதன், கிறிஸ் லின், அசேல குணரட்ண.

தம்புள்ள ஓரா: மத்தியூ வேட், குசல் மெண்டிஸ், லுங்கி என்கிடி, அவிஷ்க பெர்ணாண்டோ, தனஞ்சய டி சில்வா, குசல் பெரேரா, ஹெய்டன் கெர், சதீர சமரவிக்கிரம, பினுர பெர்ணாண்டோ, நூர் அஹ்மட், சஷிந்த ஜயதிலக, ஜனித் லியனகே, துஷான் ஹேமந்த, பிரமோத் மதுஷன், ஷஹ்னவாஸ் டஹானி, லக்‌ஷன் எதிரிசிங்கே, ஜெஹான் டேனியல், வனுஹ சஹான், கவிந்து பத்திரண, ரவிந்து பெர்ணாண்டோ, அலெக்ஸ் றோஸ், ட்ரவீன் மத்தியூ, மனெல்கர் டி சில்வா, பிரவீன் ஜெயவிக்கரம.

கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்: பாபர் அஸாம், மதீஷ பத்திரண, நசீம் ஷா, சாமிக கருணாரத்ன, பதும் நிஸங்க, நிரோஷன் டிக்வெல்ல, வஹாப் றியாஸ், லக்ஷன் சந்தகான், நிபுன் தனஞ்சய, மொவின் சுபஷிங்கே, லஹிரு உதார, எஷான் மலிங்க, ஷஷிக டுல்ஷன், நுவனிடு பெர்ணாண்டோ, இஃப்திஹார் அஹ்மட், லொர்கான் டக்கர், ஜெஃப்ரி வன்டர்சே, அஞ்சலோ பெரேரா, தனஞ்சய லக்‌ஷன், கனிஷ்க அஞ்சுல, ரமேஷ் மெண்டிஸ், மொஹமட் நவாஸ், அஹான் விக்கிரமசிங்கே, யஷோதா லங்கா.

கோல் டைட்டான்ஸ்: ஷகிப் அல் ஹஸன், தசுன் ஷானக, தப்ரையாஸ் ஷம்சி, பானுக ராஜபக்‌ஷ, சீக்குகே பிரசன்னா, லஹிரு குமார, லசித் குறொஸ்புள்ளே, சொஹான் டி லிவெரா, அஷான் பிரியஞ்சன், பென் கட்டிங், மொஹமட் மிதுன், மினோத் பானுக, பசிந்து சூரியபண்டார, ஷெவோன் டானியல், மொஹமட் ஷிராஸ், லஹிரு சமரக்கோன், கசுன் ராஜித, அகில தனஞ்சய, சட் போவ்ஸ், டிம் செய்ஃபேர்ட், சொனால் டினுஷ, அவிஷ்க பெரேரா, அனுக் பெர்ணாண்டோ, விஷ்வ பெர்ணாண்டோ.



## தேசங்களுக்கான லீக் இறுதிப் போட்டியில் குரோஷியா

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு குரோஷியா தகுதி பெற்றுள்ளது.

நெதர்லாந்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான அரையிறுதிப் போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் மேலதிக நேரத்தில் வென்றே இறுதிப் போட்டிக்கு குரோஷியா தகுதி பெற்றுள்ளது.

குரோஷியா சார்பாக, அன்ட்ரே கிரமரிச், மரியோ பஸ்காலிச், புரூனோ பெட்கோவிச், லூகா மோட்ரிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நெதர்லாந்து சார்பாக டொன்யெல் மலென், நோவா லாங்க் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## ஆஷஸில் வெல்வது அவுஸ்திரேலியா, இங்கிலாந்தா?

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரானது பேர்மிங்ஹாமில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

பிரண்டன் மக்கலம், பென் ஸ்டோக்ஸின் கூட்டிணைப்பில் அணிகளைத் துவம்சம் செய்து வருகின்ற இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணித்தலைவர் பற் கமின்ஸ், ஸ்கொட் போலண்ட், நேதன் லையன் உள்ளிட்ட பந்துவீச்சுக் கூட்டணியை எவ்வாறு சமாளிக்கின்றது என்பதிலேயே இத்தொடரின் முடிவு தங்கியிருக்கிறது.



## மத்தியஸ்த நுட்ப முறை, உபாய பயிற்சிநெறி

நூருல் ஹூதா உமர்)



மத்தியஸ்த நுட்ப முறை, உபாயங்கள் தொடர்பான ஐந்து நாள்கள் பயிற்சிநெறி காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இப்பயிற்சிநெறியின்போது அம்பாறை மாவட்ட செயலக மத்தியஸ்த பயிலநனர் எம்.ஐ.எம். ஆஸாத், வவுனியா மாவட்ட செயலக மத்தியஸ்த பயிலுநர் எஸ். விமலராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 16 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.